2022 ஏப்ரல் 27]

notice அனுப்பியிருக்கிறோம். நீங்கள் பயன்படுத்தாமல் இத்தனை வருடங்களாக வைத்திருக்கிறீர்கள் என்று சொன்னால், அந்த இடங்களை ஒப்படைத்துவிட வேண்டுமென்று கேட்டிருக்கிறோம். ஆனால், இதில் என்ன பிரச்சினை என்றால், இந்த இரண்டு வருடங்களாக COVID நோய்த் தொற்று இருந்ததன் காரணமாக, பல இடங்களில் இடத்தைப் பெற்றிருக்கக்கூடியவர்கள் ‘COVID முடக்கக்காலத்தில் தொழில் துவங்குவதற்கான முயற்சிகளை எங்களால் தொடங்க முடியவில்லை. எங்களுக்கு இருக்கக்கூடிய பொருளாதார சூழ்நிலை, மற்ற சூழ்நிலை, மற்ற நிலைமைகளைக் கருத்தில்கொண்டு எங்களுக்கு நீங்கள் ஒரு Extension கொடுக்க வேண்டும்’ என்று கேட்டிருக்கிறார்கள். தொழில்முனைவோர்கள் சொல்வதில் ஒரு நியாயமான காரணம் இருப்பதாக நாங்கள் உணர்கிறோம். அப்படி நியாயமான காரணங்கள் இருக்கக்கூடிய இடங்களாக இருந்தால், அதனை அரசு கனிவோடு கவனிக்கும். அப்படியில்லாமல், அதற்கு முன்பே நிலத்தை வாங்கிக்கொண்டு, எந்தவித தொழிலும் நடத்தாமல் அப்படியே வைத்திருந்தார்கள் என்று சொன்னால், அரசு நிச்சயமாக அவற்றைக் கையகப்படுத்தலாம். உங்களுடைய கேள்வியை வைத்தே நாங்கள் அதற்கான பணிகளைச் செய்வதற்கு வாய்ப்பாக இருக்கும்.

முற்பகல் 10—55

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 186, மாண்புமிகு உறுப்பினர் திரு. சேவூர் S. இராமச்சந்திரன் அவர்கள். மாண்புமிகு குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் அவர்கள்.

186—

சிட்கோ தொழிற்பேட்டை

***7577—திரு. சேவூர் S. இராமச்சந்திரன்:**

மாண்புமிகு குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆரணி தொகுதியில் சிட்கோ தொழிற்பேட்டை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

[2022 ஏப்ரல் 27

மாண்புமிகு திரு. தா.மோ. அன்பரசன், குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) திருவண்ணாமலை மாவட்டம், ஆரணி தொகுதிக்குட்பட்ட பகுதியில் சிட்கோ தொழிற்பேட்டை அமைக்கும் செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. சேவூர் S. இராமச்சந்திரன் அவர்கள்.*

திரு. சேவூர் S. இராமச்சந்திரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருவண்ணாமலை மாவட்டம், ஆரணி சட்டமன்றத் தொகுதியில் சுமார் 5 இலட்சத்திற்கும் அதிகமான மக்கள் வசிக்கின்றனர். இவர்கள் பெரும்பாலும் விவசாயம் மற்றும் நெசவுத் தொழில்களைச் சார்ந்து வாழ்கிறார்கள். இந்தத் தொகுதியில் அரசு மற்றும் அரசு சார்ந்த தொழிற்சாலைகள், தொழிற்பூங்காக்கள் மற்றும் தொழிற்பேட்டைகள் ஏதும் இல்லை. இங்கு தொழிற்பேட்டை அமைக்கத் தேவையான வசதிகள் உள்ளன. எனவே, ஆரணி தொகுதியில் சிட்கோ தொழிற்பேட்டை அமைத்துத்தர வேண்டுமென தங்கள் மூலமாக மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. தா.மோ. அன்பரசன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருவண்ணாமலை மாவட்டம், திருவண்ணாமலையில் 15.56 ஏக்கரில் 13 தொழில்மனைகள் மற்றும் 16 தொழிற்பேட்டைகள் இயங்கி வருகின்றன. மேலும் செங்கம் வட்டம், பெரியகோலம்பாடி கிராமத்தில் 57.18 ஏக்கர் நிலப்பரப்பில் 171 தொழில் மனைகள் கொண்ட புதிய தொழிற்பேட்டைக்கான மேம்பாட்டுப் பணிகள் கழக அரசால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. முதற்கட்டமாக 33 தொழில் மனைகள் பயன்பாட்டுக்குக் கொண்டு வரப்பட்டுள்ளன. தொழில்முனைவோர்களின் தேவைக்கேற்ப இதர மனைகள் மேம்படுத்தப்பட்டு, ஒதுக்கீடு செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. சேவூர் S. இராமச்சந்திரன் அவர்கள்.*

2022 ஏப்ரல் 27]

திரு. சேவூர் S. இராமச்சந்திரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வணக்கம். ஆரணி சட்டமன்றத் தொகுதியில் பிரதான தொழிலாக கைத்தறி நெசவுத் தொழில் உள்ளது; நெல் உற்பத்தியாளர்களும் உள்ளனர். இந்தத் தொகுதியில் வசிக்கும் படித்த இளைஞர்கள் மற்றும் இளம்பெண்கள் சுமார் 2 இலட்சத்திற்கும் மேலானவர்கள் மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகத்தில் பதிவு செய்து காத்திருக்கின்றனர். எனவே, இப்பகுதியில் நெல் தவிடுமூலம் உற்பத்தி செய்யும் எண்ணெய் ஆலைகள், நவீன அரிசி ஆலைகள், பஞ்சு நூற்பாலைகள், பட்டு கைத்தறி ஆலைகள் மற்றும் விசைத்தறிக் கூடம் போன்றவற்றை அமைத்திட ஏதுவாக இதற்குத் தேவையான மூலப்பொருட்கள் தங்குதடையின்றி இங்கு கிடைக்கின்றன. இதற்குத் தேவையான நிலங்களை நில எடுப்புச் சட்டத்தின்கீழ் சிறப்பு நில ஒதுக்கீட்டின்மூலம் எடுத்து, இங்கு சிட்கோ தொழிற்பேட்டை அமைத்துத் தந்தால் புதிய தொழில்முனைவோர்கள் ஆர்வத்துடன் தொழில் தொடங்க முன்வருவார்கள். எனவே, ஆரணி தொகுதி மக்களின் கோரிக்கையை மறுபரிசீலனை செய்து, தங்கள் துறை அதிகாரிகள்மூலம் கள ஆய்வு செய்து, சிட்கோ தொழிற்பேட்டை அமைக்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதைத் தங்கள் மூலமாக கேட்டுக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. தா.மோ. அன்பரசன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆரணி தொகுதிக்குட்பட்ட பகுதியில் தொழிற்பேட்டை அமைக்க 15 ஏக்கருக்கு மேல் அரசு நிலம் ஏதுமில்லை என மாவட்ட நிர்வாகத்திடமிருந்து அறிக்கை பெறப்பட்டுள்ளது. இருப்பினும், மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் ஆரணி தொகுதிக்குட்பட்ட பகுதியில் சாலை வசதிகளுடன்கூடிய தகுதியான நிலத்தைக் கண்டறிந்து அதனை அரசுக்குத் தெரிவிக்கும்பட்சத்தில் தொழிற்பேட்டை நிச்சயமாக அமைத்துத் தரப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மேலும், ஆரணி தொகுதியில் குறைந்தபட்சம் 20 தனியார் தொழில்முனைவோர்கள் சேர்ந்து தகுதியான நிலத்துடன் தொழிற்பேட்டை அமைக்க முன்வரும்பட்சத்தில் அரசின் சார்பில் 15 கோடி ரூபாய்க்கு மிகாமல் மானியமாக வழங்கி, நிலத்தை

சரிசெய்து தொழிற்பேட்டை அமைப்பதற்கான ஏற்பாடுகளை அரசு நிச்சயமாக செய்துதரும் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 187, மாண்புமிகு உறுப்பினர் திரு. N. அசோக்குமார் அவர்கள். மாண்புமிகு மீன்வளம்–மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.

187—

தூண்டில் வளைவு

***9684—திரு. N. அசோக்குமார்:**

மாண்புமிகு மீன்வளம்–மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பேராவூரணி தொகுதி, சேதுபாவாசத்திரம் மீன்பிடித் துறைமுகத்தில் தூண்டில் வளைவு அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. அனிதா R. ராதாகிருஷ்ணன், மீன்வளம்–மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) தஞ்சாவூர் மாவட்டம், பேராவூரணி தொகுதி, சேதுபாவாசத்திரத்தில் தூண்டில் வளைவு அமைத்திடும் திட்டம் ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. N. அசோக்குமார் அவர்கள்.

திரு. N. அசோக்குமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேராவூரணி தொகுதி நீண்ட கடற்கரையினைக் கொண்ட பகுதியாகும். இங்கு கடல் ஆழம் இல்லாததால் அதிக அளவில் ருசியான மீன்கள் கிடைக்கின்றன. கடல் சீற்றம் மற்றும் புயல் காலங்களின்போது கரையில் நிறுத்தப்பட்டுள்ள படகுகள் ஒன்றோடொன்று மோதி சேதம் அடைகின்றன.